C.C 368/15
PW 6

**பெயர் ஜெயபிரகாஷம்**

**தேதி** 16.092022

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து 4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் வங்கியில் தினசரி சிறுசேமிப்பு செயல்பாட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தற்காலிகாக பணியாளர் ஆவேன். இந்த வழக்கு சம்மந்தமாக நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சொல்லிகேள்விபட்டேன். அத்தாட்சியில் கையெழுத்து செய்தும் போது நகைகளை சரிபார்த்தேனா என்றால் 8 பாக்கெட் நகைகள் இருந்தது. அதன் எடைகள் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எங்களது வங்கியில் ரமேஷ் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தன்று ரமேஷ் என்பவரை விசாரணைக்கு அழைத்து சென்றார்களா என்றால் அது எனக்கு தெரியாது. உயர்அதிகாரிகள் சொலலிக்கொடுத்து உயர்அதிரகாரிகளுக்கு கட்டுப்பட்டு இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1.6.11லிருந்து தற்போது வரை மேற்படி வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் வங்கியில் மொத்தம் 12 பணியாளர்கள். மேற்படி நபர்களுடன் அலுவலல் சம்மந்தப்பட்ட தொடர்பில் இருப்பேன். அலுவலல் சம்மந்தப்பட்ட விபரங்கள் அனைத்தும் தெரியும் என்றும் ரமேஷ் என்பவரை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.